# இஸ்லாமிய நோக்கில் நல்லாட்சி எண்ணக்கரு

ARM. Mahsoom[1], MT. Hidayathullah[2], AJ Abdul Rahman[3] &
MFF. Sumaiya[4]

[1,2,3,4] Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka
mahsoomzahry92@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஆன்மீகத்திலும் அரசியலிலும் ஒன்று சேறும் போதுதான் கோட்பாடு ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் எந்த ஒரு கொள்கையும் உச்சத்தை தொட்டு நிலை பெறுகிறது. இன்று உலகில் தோன்றி மறைந்த அனைத்து கொள்கைகளும் இந்த இரண்டையும் ஒரு சேர கண்டுகொள்ளாமையே அவைகளது வீழ்ச்சிக்கு காரணமாயின. ஆனால் எவ்வளவுதான் வரலாற்று மனிதர்கள் தோன்றி மறைந்தாலும் இஸ்லாமிய அரசின் தலைவர், அண்ணலாரின் இடத்தை எவராலும் எட்ட இயலாமல் போனதற்கான ஒரே காரணி சந்திக்க சாத்தியமில்லை என்று கருதிய இரு துருவங்களான ஆன்மீகம் மற்றும் அரசியல் என இரண்டையும் ஒன்றினைத்து வெற்றிகண்டமையாகும். அரசியலுக்கு நடைமுறை விளக்கம் கொடுத்த மார்க்கம் இஸ்லாமே என்பது வாதத்திற்கு இடம் தராத ஒரு வரலாற்று உண்மை. எனவே நாம் இந்த ஆய்வில் எமக்கான தனியான தனித்துவமான ஓர் அரசியல் ஒழுங்கு உள்ளது என்பதை தெரிந்த நிலையில் இன்று பலராலும் பேசப்பட்டு வருகின்ற நல்லாட்சி எண்ணக்கரு இஸ்லாமிய அரசியல் கோட்பாட்டுக்கு எவ்வகையில் உடன்படுகின்றது, முறண்படுகின்றது. என்ற பிரச்சினையை மையமாகக் கொண்டே இவ்வாய்வு அமைந்துள்ளது. இந்த ஆய்வில் இரண்டாம் நிலை தரவுகளை முதன்மையாக் கொண்டே ஆய்வு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது பண்பு சார் பகுப்பாய்வு முறையில் ஒழுங்கு படுத்தப்பட்ட ஆய்வு முறையியலாகும். நல்லாட்சி எண்ணக்கருவின் பண்புகளான பங்குபற்றுதல், வெளிப்படைத்தன்மை, சட்டவாட்சி, பொறுப்புக் கூறல், சமத்துவமும் உள்வாங்களும், கணக்குகாட்டல், வினைதிறனும் விளைதிறனும், கருத்தொருமித்தலும் இஸ்லாமிய அரசியல் கோட்பாட்டிலிருந்து தோற்றம் பெற்றவை என்பது இவ்வாய்வின் கண்டறிதலாகும். எனவே எந்த ஒரு கோட்பாட்டையும் இஸ்லாமிய அடிப்படையில் இருந்து நோக்குகின்ற பார்வை வரவேண்டிய தேவை முன்மொழியப்பட்டது.

**கலைச் சொற்கள்** :- நல்லாட்சி, இஸ்லாமிய அரசு, கோட்பாடு, எண்ணக்கரு

## ஆய்வு அறிமுகம்

இஸ்லாமிய வரலாறு மட்டுமல்ல; முழுமொத்த சமுதாயத்தின் வரலாறும் அரசியலோடு பின்னிப்பினைந்ததே உலகின் மனித வாழ்வின் சுபீட்ச்சத்திற்கு அல்லது இழி நிலைக்கு சாதகமாகவோ பாதகமாகவோ பணியாற்றிய பெறுமை வராலாற்றில் அரசியலுக்கே உண்டு. எனவே அரசியல் என்பது ''ஆட்சி அதிகாரம் பற்றிய கோட்பாடுகளும் நடைமுறைகளும்தான் எனப்படுகிறது''. (Www.Elukathir.Lk:2016) மனித சமூகத்தை அநியாயக்கார ஆட்சியாளர்களிடம் இருந்து விடுவிப்பதற்காக முன்வைக்கப்பட்ட ஜனநாயகம், பூர்சுவாக்களின் அநியாயங்களில் இருந்து பாதுகாக்க முன்வைக்கப்பட்ட சமதர்மக் கோட்பாடு, பிரான்ஸியப்புரட்சியின் சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் ஆகிய அரசியல் எண்ணக்கருக்கள், இயற்கை வளங்களையும், பௌதீக சூழலையும் பாதுகாப்பதற்காக முன்வைக்கப்பட்ட பசுமை அரசியல் போன்ற அரசியல் சிந்தனைகளின் வரிசையில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் எண்ணக்கருவே நல்லாட்சி எண்ணக்கருவாகும்.

1980 காலப்பகுதிக்கு பிற்பாடு நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி மந்தகரமானதாக காணப்பட்டமை, சமூக நீதி வீழ்ச்சி அடைந்தமை போன்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகளை தேடிய பயணத்தின் வெளிப்பாடே நல்லாட்சி பற்றிய சிந்தனையாகும். ஆகவே நல்லாட்சி என்பது யாதாயினும் ஒரு சமூகத்தில் வாழும் ஒட்டு மொத்த மக்களின் நம்பிக்கை விருப்பு, நட்புறவு, ஒத்துழைப்பு ஆகியவற்றை அறிந்து கொண்டு முண்னெடுக்கப்படும் ஆட்சியாகவும் மேலும் ஒரு சமூகத்தால் அல்லது அரசினால் நிறுவனங்களால் செயற்படுத்தப்படுவதாகவும் காணப்படும் ஆட்சி முறையே நல்லாட்சி என வரைவிளக்கனப்படுத்தலாம். (தோமஸ் w)

இஸ்லாமிய அரசியல் என்பது (சியாசிய்யா) கவனித்துக் கொள்ளல் என்று மொழி ரீதியாகவும் ஷரீஆவின் அடிப்படையில் மக்களின் விவகாரங்களை கவனித்துக் கொள்ளல் என்பதே அதன் விளக்கமாகும்.''எவரொருவர் முஸ்லீம்களின் விவகாரங்களில் அக்கரை கொள்ள வில்லையோ அவர் முஸ்லிமாக மாட்டார்.'' (ஹாகிம்) என்ற நபிகளாரின் அறிவிப்பு இதற்கு ஆதாரமாகும்.

### ஆய்வுப் பிரச்சினை

நல்லாட்சி எண்ணக்கருவானது இஸ்லாமிய அரசியல் கோட்பாட்டுடன் உடன்படுகின்ற முறண்படுகின்ற விதம் எவ்வாறு என்ற கேள்விக்கு விடை தேடுவதே ஆய்வுப் பிரச்சினையாகும்.

### ஆய்வின் முக்கியத்துவம்

'சர்வதேச முஸ்லிம் உம்மாவின் பல்வேறுபட்ட சமீபத்திய அரசியல் தோல்விகளுக்கான பிரதான நியாயமாக இஸ்லாமிய அரசியல் சிந்தனை பற்றிய மிகச்சரியான புரிதல் இன்மையே காரணியாகும்' (கலாநிதி ஷன்கீதி எம் எம்) என்ற கருத்து இஸ்லாமிய அரசியலையும், நவீன நல்லாட்சி அரசியலையும் ஒப்பீடு செய்வதின் தேவைப்பாட்டை உணர்த்துகிறது.

இஸ்லாமிய அரசியல் குறித்து முஸ்லீம் தமிழ் பேசும் ஆய்வாளர்களினால் உரிய முக்கியத்துவம் கொடுத்து ஆய்வு செய்யப்படாததும், குறிப்பாக இஸ்லாமிய சட்டத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆய்வு செய்யப்பட்ட அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்காததுமான ஓர் இஸ்லாமிய அடிப்படை என்ற வகையில் இவ்வாய்வு முதன்மையான பணியாகும்.

### ஆய்வின் நோக்கம்

நல்லாட்சி என்ற எண்ணக்கரு இஸ்லாமிய அரசில் கோட்பாட்டுடன் உடன்படுகின்ற, முறண்படுகின்ற விதத்தினைக் கண்டறிதல்.

### ஆய்வு முறையியல்

இங்கு இரண்டாம் நிலை தவவுகளை வைத்தே ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இது பண்பு சார் பகுப்பாய்வு முறையில் ஒழுங்குபடுத்ப்பட்ட ஆய்வாகும். எனவே இரண்டாம் நிலை தரவுகளாக ஆய்வுகள், நூற்கள், மலர்கள் , சஞ்சிகைகள் கருதப்படுகின்றன.

### இலக்கிய மீளாய்வு

محمد ،غربي.(2011). " الديمقراطية والحكم الراشد". دفاتر السياسية والقانون (ஜனநாயகமும் நல்லாட்சி) என்ற ஆய்வு நூல் நல்லாட்சியின் பண்புகளை அடையாளம் கண்டு கொள்ளவும் அதனிலிருந்து ஜனநாயகம் எப்படி வேறுபடுகின்றது என்பதனையும் தெளிவுபடுத்துகின்றது. இந்த ஆய்வின் கோட்பாடுரீதியான அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் பெற்றுக் கொள்வதற்காக இவ்வாய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது.

யூஸுப் அல் கர்ளாவி, (2012) இஸ்லாமிய அரசியல் என்ற நூலில் இஸ்லாமிய அரசின் தோற்றம் ஜனநாயகமும் இஸ்லாமிய அரசும் உடன்படும் முரண்படும் அம்சங்கள் இஸ்லாமிய அரசின் அடீப்படைகளை அந்த நூலிருந்து இந்த ஆய்வின் தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டுள்ளது.

சன்கீதீ, முக்தார்.(2017). "இஸ்லாமிய அரசியல் சிந்தனையும் தேசிய அரசு முறைமையும் ஓர் ஒப்பீட்டு நோக்கு". Retrieved from: https://todayleaks.wordpress.com/2017/12/20/ ஓர் ஒப்பீட்டு நோக்கு என்ற ஆய்வுக்கட்டுரை இஸ்லாமிய அரசின் அடீப்படை குறித்தும் தேசிய அரசு குறித்தும் அற்புதமாக ஒப்பிட்டுருப்பதுடன் நவீன சவால்களை எதிர் கொள்ளும் வகையில் இஸ்லாமிய அரசியல் சிந்தனையினை மீள் வடீவமைப்பதற்கான முழுமையான திட்டவரைபைப் பற்றி கலந்துரையாடுகின்றார் இவ்வாய்வுக் கட்டுரை ஆய்வாளருக்கு இஸ்லாமிய அரசு குறித்த பரந்த பார்வையொன்றினை வழங்கியமை இந்தப் பரப்பினை அழகுபடுத்த உதவியாக அமைந்தது.

இஸ்லாத்தில் அரசியல் ஒழுங்கும் இஸ்லாமிய சட்டவாக்கின் சிறப்பம்சங்களும் என்ற ஆய்வு நூல் வாசிக்கப்பட்டது இவ் ஆய்வினை வடீவமைத்துக் கொள்ள பெரிய உதவியாக அமைந்திருந்தது.

மனிதவள வளர்சியில் அபிவிருத்தியில் நல்லாட்சியின் அடீப்படைகளின் வகிபாகம் என்ற ஆய்வு வாசிக்கப்பட்டது. குறித்த ஆய்வு நல்லாட்சி குறித்த அடீப்படைகளையும் அதனது பண்புகளையும் மிக ஆழமாக பேசுகிறது.

**د. نبيل البابلي الحكم الرشيد: الأبعاد والمعايير والمتطلبات** (நல்லாட்சி இலக்குகளும் அடீப்படைகளும் தேவைப்பாடுகளும் 2018) என்ற கட்டுரையானது நல்லாட்சி என்றால் என்ன? அதனது இன்றைய தேவைப்பாடுகள் என்ன? என்ற சகல பகுதிகளையும் விலாவாரியாக விமர்சன நோக்கில் அணுகியுள்ளமை குறிப்பிடத்தக்கது இக்கட்டுரை இந்த ஆய்வின் பகுப்பாய்விற்கு உதவியாக அமைந்தது. இவ்வாய்வு நூல் இஸ்லாமிய அரசின் அடிப்படைகளை விளக்குவதோடு ஜனநாயகம் இஸ்லாமிய அரசின் மையத்தளத்தில் இருந்து எவ்வாறு நோக்கப்பட வேண்டும் என்பது குறத்தும் அலசுகிறது. எனினும் நல்லாட்சி குறித்து இந்த ஆய்வுக்காக இஸ்லாமிய அரசின் அடிப்படைகளை புரிந்து கொள்ள இந்த நூலும் வாசிப்புக்குட்படுத்தப்பட்டது.

அஸ்வர், ஏ.எம், ரம்ஸியா,எம்.ஆர்.எப். (2016). ''இலங்கையில் நல்லாட்சியை கட்டியெழுப்புதல்: ஓர் விமர்சனப் பகுப்பாய்வு''. South Eastern University of Sri Lanka: Arts Research Session. என்ற ஆய்வுக் கட்டுரை நல்லாட்சி தொடர்பான வரைவிலக்கணங்கள் அதன் வடிவங்கள் தோற்றம் வளர்ச்சி ஆகியவற்றை அலசுகிறது. குறித்த ஆய்வும் ஆய்வினை முறையாக ஒழுங்கிபடுத்திக் கொள்ள உதவியாக அமைந்தது.

**கலந்துரையாடல்களும் கண்டு பிடிப்புக்களும்**

- ✓ **நல்லாட்சி எண்ணக்கரு இஸ்லாமிய அரசியல் கோட்பாட்டுடன் உடன்படும், முறண்படும் பாங்கினைக் கண்டறிதல்.**

இன்நோக்கத்தை அடையும் பொருட்டு இஸ்லாமிய அரசியலின் அடிப்படைகளை ஆரம்பத்தில் அடையாளப்படுத்தல்.

நவீன இஸ்லாமிய அரசியல் சிந்தனையினை கட்டியெழுப்பும் நோக்கில் மாதிரிகளினைத் தவிர்த்து அடிப்படைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நபி (ஸல்) அவர்கள் தோற்றுவித்த மதீனா சமூகத்தினையே அளவு கோளாகக் கொள்ள வேண்டும் என கலாநிதி முகம்மத் இப்னு முக்தார் அல்ஷன்கீத்தி தெளிவுபடுத்துகிறார். எனவே நபி (ஸல்) அவர்கள் தோற்றுவித்த மதீனா அரசு பின்வரும் கூறுகளைக் கொண்டமைந்துள்ளதாக முக்தார் அல்ஷன்கீத்தி அடையாளப்படுத்துகிறார்.

- **பைஅத்தினை அடிப்படையாகக் கொண்ட சிவில் அரசு (உளைடை ளவயவந)** :
  அதாவது நபி(ஸல்) அவர்களோ மதீனா அரசின் தலைவராக இருந்தார் அவர் ஒரு நபியாக இருப்பதுவே அரசின் தலைவராக இருப்பதற்கு போதுமான தகுதியாகும். ஆனால் ஆட்சியாளர் பொதுமக்களின் விருப்பில் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற இஸ்லாத்தின் அடிப்படையினை வழியுறுத்தும் வகையில் அகபாவில் வைத்து ஆளப்படுவோரின் திருப்தியை பெற்றுக் கொண்ட பின்னரே மதீனாவின் தலைவராக நபி(ஸல்) அவர்கள் பதவியேற்றார். இதனால் மதீனா அரசினை சிவில் அரசு என கருதலாம்.

- **சூராவினை அடிப்படையாகக் கொண்ட அரசு :**
  நபி (ஸல்) அவர்களின் அரசாட்சி ''சர்வாதிகாரமாக'' இருக்கவில்லை. மாறாக ஆளப்படுவோரின் ஆலோசனைகளும் கருத்துக்கலையும் பகுப்பாய்வு செய்து செயற்படுத்தும் தேசமாக இருந்தன. இன்னும் நாட்டின் அனைத்து விவகாரங்களிலும் சகல மக்களினதும் பங்கேற்பினை உறுதி செய்யும் அரசாக மதீனா தேசத்தினை கருதலாம்.

- **சமூக ஒப்பந்தத்தினை அடிப்படையாக் கொண்ட அரசு :**
  நபி (ஸல்) அவர்களின் ஆட்சியை மதீனா வாசிகள் ''சமூக ஒப்பந்தத்தின்'' (ளழஉயைட உழவெசயஉவ) அடிப்படையிலேயே ஏற்றுக் கொண்டனர். மதீனா ''சாசனம்'' முழுமையாக அவ்வொப்பந்தத்தின் கூறுகளை உள்ளடக்கியிருந்தன. நுபி (ஸல்) அவர்களின் காலப்பகுதியில் மதீனாவின் ஆட்சிப் பிரதேசத்திற்குள் இணைந்து கொள்வதற்க்கு விருப்பம் தெரிவித்த பல கோத்திரங்களை இச்சமூக ஒப்பந்தத்தினை அடிப்படையாக வைத்தே நபி (ஸல்) அவர்கள் இணைத்துக் கொண்டார்.

- **பல்லின சமூகங்களின் தனித்துவங்களை ஏற்றுக் கொண்ட அரசு (அரடவனிடந னைநவெவைநைள):**
  நபி (ஸல்) அவர்கள் மதீனாவை நிர்வகிக்கும் போது சகல விதமான பன்மைத்துவங்களையும் அங்கீகரித்தார். உதாரணமாக அகீதா சார்ந்த உறவையும் மதீனா சாசனத்தினூடாக பாதுகாத்தார். ஏனென்றால் அகீதா சார்ந்த உறவு என்பது முஸ்லீம் சமூகத்தின் தனித்துவங்களில் (சநடபைழைரள னைநவெவைல) ஒன்றாகும். இரண்டாவது ஏனைய அரசியல் பன்மைத்துவத்தினையும் (ிழடவைஉயட ிடரசயடளைஅ) அங்கீகரித்தார். மதீனாவில் உள்ள சகல மதங்களைச் சார்ந்தவர்களையும் மதீனாவின் அரசியல் அங்கமாக மதீனா சாசனம் பிரகடனம் செய்கிறது.

- **புவியியல் எல்லைகளை மையப்படுத்திய அரசு :**
  மதீனா தேசம் நில எல்லைகளால் வரையரை செய்யப்பட்டது. யாராவது மதீனாவின் குடிமகனாக அங்கீகரிக்கப்பட வேண்டுமாக இருந்தால் மதீனா தேசத்திற்கு உரித்தான நிலப்பிரதேசத்திற்க்குள் வாழ வேண்டும். ஒரு வேலை மதீனாவில் வசிக்காதவர் ஒரு முஸ்லீமாக இருந்தாலும் கூட மதீனா சமூகத்தினை சேர்ந்த குடிமகனாக கருதப்பட மாட்டார் என மதீனா சாசனம் பிரகடனம் செய்கிறது. அத்தகைய முஸ்லிமின் உயிருக்கும் பொருளுக்கும் மதீனா தேசத்தின் அரசு பொறுப்பாளியுமல்ல என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

- **சம பிரஜாவுரிமையினை மையப்படுத்திய அரசு :**
  அதாவது மதீனா அரசினை உருவாக்குவதற்காக உழைத்த மற்றும் மதீனா சாசனத்தில் கையெழுத்திட்ட எல்லா மதீனா வாசிகளையும் நபி (ஸல்) அவர்கள் சமமான குடியுரிமையுள்ள மதீனாவின் பிரஜையாகவே கருதினார். எனவே மதீனாவிற்குள் வாழ்ந்த ஏனைய மதங்களைச் சேர்ந்த மக்களிடம் ஜிஸ்யா வரியை நபியவர்கள் அறவிடவில்லை.

**இஸ்லாமிய மூலாதாரங்களிலிருந்து நல்லாட்சியின் பிரதான பண்புகளை அடையாளப்படுத்தல்**

இஸ்லாமிய அரசின சட்ட யாப்பாக கொள்ளப்படுகின்ற குர்ஆனும் சுன்னாவும் மிகப் பரவலாகவே நல்லாட்சி குறித்து அடிப்படையான கோட்பாடுகளை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**إن الله يأمركم أن تؤدوا الأمانات إلى أهلها وإذا حكمتم بين الناس أن تحكموا بالعدل**

என்ற இஸ்லாமிய அரசியல் யாப்பின் வாசகம் ஓர் அற்புதமான சட்ட அடிப்படையை சொல்கிறது. அதாவது அமானிதம் எனும் போது தனக்கு வழங்கப்பட்ட கடமைகளையும் பொருப்புக்களையுமே குறித்துக் காட்டுகிறது. எனவே அந்த பொறுப்புக்களில் ஆள்வோர் குறை செய்யாது ஆளப்படுவோறுக்கு விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டும். அத்துடன் அவற்றுக்கான கணக்கு காட்டல் என்ற நல்லாட்சி எண்ணக்கரு இங்கு பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

ஸகாத் இஸ்லாமிய அரசின் பொருளாதார அடிப்படையாக கருதப்படுகிறது. ஸகாத் என்பதன் மூலமாக குறிப்பிட்ட சாரார் குறிப்பிட்ட பொருட்களில் குறிப்பிட்ட நேரத்தில் கொடுக்கப்பட வேண்டியது என வரையரை செய்தாலும் இஸ்லாமிய அரசு அதனை ஒரு வித்தியாசமான கோணத்திலே நோக்குவதனை அவதானிக்கலாம். அதாவத ஒரு தனி மனிதன் தனது பொருளாதாரத்தை நியமமாக கணக்கிட்டு கொடுக்க வேண்டும் என்ற சட்டத்தினூடாக சொல்ல வரும் செய்தி என்னவென்றால் ஒவ்வொரு தனிமனிதனும் இஸ்லாமிய அரசுக்கு தனது பொருளாதாரம் மற்றும் வருமானம் தொடர்பான கணக்கறிக்கை ஒன்றை சமர்பிக்க வேண்டும் என்பதனைக் காட்டுகின்றது. குறித்த தனிமனிதர்கள் தமது பொருளாதாரத்தில் நியமமாக கணக்கிட்டு கொடுக்காத பட்சத்தில் அவர்களோடு போரிடுவதற்க்கு முனைந்தமை இஸ்லாமிய அரசின் கணக்குக் காட்டல் என்ற அம்சத்துக்கு எடுத்துக் காட்டாகும்.

எதிரிகள் தங்களைத் தாக்க பெறும் படையுடன் வருவதாக கிடைத்த தகவலின் மூலம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடனடியாக உயர் மட்ட ஆலோசனைக் குழுவை கூட்டினார்கள். மதீனா இஸ்லாமிய அரசையும் அங்கு வாழும் சகல மக்களையும் எப்படி தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி ஆலோசனை நடாத்தினார்கள். ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் மத்தியிலும் இஸ்லாமிய அரசின் ஜனாதிபதிக்கு மத்தியிலும் ஏற்பட்ட கருத்து பரிமாற்றங்களின் பிற்பாடு நபித்தோழர் ஸல்மானுல் பாரிஸி முன்வைத்த ஆலோசனையை ஏகமனதான முடிவாக ஏற்க்கப்பட்டது. ‘‘அல்லாஹ்வின் தூதரே நாங்கள் பாரஸீக நாட்டில் இருந்த போது எங்களை எதிரிகள் தாக்க வந்தால் எங்களைச் சுற்றி அகழி தோன்றிக் கொள்வோம்’’ எனக் கூற அது சபை அங்கீகாரம் பெற்றது. அப்பொழுது அங்கு ஒவ்வொரு 10 நபர்கள் கொண்ட குழுவும் 40 முழம் அகழ் தோண்ட வேண்டும் எனவும் ஆலோசிக்கப்பட்டு அப்பணியும் குறித்த நேரத்தில் எதிரிகளின் படை வருவதற்கு முன்பே முடிவடைந்தது.

இச் சம்பவத்தினூடாக மதீனா இஸ்லாமிய அரசின் அடிப்படையான பண்புகளை வெறும் கோட்பாடு ரீதியாக மட்டுமன்றி நடைமுறை ரீதியாகவும் பிரயோகிக்கபட்டுள்ளமை அவதானிக்க முடிகின்றது. இன்று நல்லாட்சியின் பண்புகளாக கருதப்படும் பின்வரும் முக்கிய பண்புகள் இந்த சம்பவம் மூலம் வெளிப்படுகிறது.

**பங்கேற்றல்**

ஒரு நாட்டின் எல்லா சமூகங்களையும் கொள்கை சார்ந்த தீர்மானங்களை எடுக்கும் போது அனைத்து சமூகங்களினதும் பிரதிநிதித்துவங்களை உள்வாங்கல்.

**கருத்தொருமித்தல்**

தனிப்பட்ட நலன்களுக்கு அப்பால் எல்லா சமூகங்களினதும் மொத்த நலன்களையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு இணக்கப்பாட்டையும் கருத்தொருமித்தளையும் அடைதல் வேண்டும். ஒரு நாட்டின் சமூக, கலாசார, சமய, மொழி, அரசியல் என்பவற்றில் பன்மை கருத்துடைய மக்கள் காணப்பட்ட போதிலும் அவர்களுக்கிடையில் கருத்தொருமித்தலை குறைந்த மட்டத்திலாவது ஏற்ப்படுத்தல் நல்லாட்சியின் தேவையாகும்.

இது இன்றைய நல்லாட்சியின் முக்கிய பண்பாக கருதப்படுகிறது. அதாவது அரசியல் தலைமை தனது முடிவை மாத்திரம் நடை முறைப்படுத்தாமல் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கொடுத்து இங்கு தீர்மானம் பெறப்பட்டமையானது இஸ்லாமிய அரசின் உச்ச நல்லாட்சிப் பண்பாக காணப்படுகின்றது.

உண்மையில் ஆலோசனை என்பது ஓர் அரசின் நிர்வாக செயற்பாடாகும் மதீனா அரசின் கேள்விக்குறியாகும் எதிர் காலம் குறித்து ஆலோசனை செய்வது ஓர் மிக முக்கிய உயர் நிர்வாகச் செயற்பாடாகும். என்றிருந்தாலும் மதீனாவை பிறப்பாகக் கொள்ளாத பிரிதொரு தேசத்தைச் சேர்ந்த பாரஸீகத்தை தேசியமாக் கொண்ட ஸல்மான் என்கின்ற மனிதரையும் இங்கு அந்த நிர்வாக அமர்வில் அல்லது ஆலோசனை அமர்வில் இணைத்துக் கொண்டமை பங்குபற்றவைத்தமை நல்லாட்சியின் உயரிய பண்புக்கு எடுத்துக்காட்டாகும்.

தனிப்பட்ட நலன்களுக்கு அப்பால் எல்லா சமூகங்களினதும் மொத்த நலன்களையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு இணக்கப்பாட்டையும் கருத்தொருமித்தளையும் அடைதல் வேண்டும். ஒரு நாட்டின் சமூக, கலாசார, சமய, மொழி, அரசியல் என்பவற்றில் பன்மை கருத்துடைய மக்கள் காணப்பட்ட போதிலும் அவர்களுக்கிடையில் கருத்தொருமித்தலை குறைந்த மட்டத்திலாவது ஏற்ப்படுத்தல் நல்லாட்சியின் தேவையாகும்

**வினைத்திறன்**

உண்மையில் 5000 முழம் நீளம் கொண்ட அகழி தோண்ட வேண்டும் என்பது நவீன சாதனங்கள் அற்ற அந்த யுகத்தில் மிகவும் சிரமமான ஒரு காரியமே. அதுவும் இஸ்லாமிய அரசு மிகச்சிறிய அளவிலான மனித வளங்களையே கொண்டிருந்தது. அத்துடன் வாய்ப்பு வசதிகளும் ஏனைய பௌதீக வளங்களும் மிகக் குறைவாக இருந்ததுடன் கடுமையான குளிர்காலமாகவும் இருந்தது. அப்படி இருந்தும் கூட இருக்கின்ற மனித வளங்களை மிகச் சரியாக திட்டமிட்டு அவர்களில் இருந்து உச்ச பயன் அடைந்தமையானது இஸ்லாமிய அரசின் வினைதிறனை எடுத்துக் காட்டுகிறது. நாட்டினது திறை சேரியில் எதுவித மீதங்களும் இல்லாத போது அரசின் தலைமை மக்களை மிகச் சரியாக வழிகாட்டி தானும் கலத்தில் இறங்கி தானும் பணி செய்தமை இந்த அரசின் உச்ச வினைதிறனை காட்டுகின்றது.

**விளைதிறன்**

குறைந்த வளங்களை உச்சமாக பயன்படுத்திய அதேவேலை குறித்த காலப்பகுதிக்குள் எதிர்பார்த்த இலக்கான "எதிரிகள் வருவதற்கு முன் அகழி தோண்டி முடிக்க வேண்டும்" என்ற நோக்கத்தை வெற்றிகரமாக அடைந்தமை இஸ்லாமிய அரசின் விளைதிறனை மதிப்பிடுவதற்கு போதுமான அளவு கோளாகும்.

**வெளிப்படைத்தன்மை**

இஸ்லாமிய அரசின் அனைத்து செயற்பாடுகளும் வெளிப்படைத் தன்மையை பறைசாட்டுவதாகவே அமைந்துள்ளன.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிற அரசுகளுக்கு இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் படி அனுப்பிய தூதுக்களில் இஸ்லாத்தின் தெளிவான கொள்கையை ஒழிவுமறைவின்றி அதிலே குறிப்பிட்டு அவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்தமை வெளிப்படைத் தன்மைக்கான சிறந்த உதாரணமாகும். அத்தோடு நபிகளார் கோத்திரங்களோடு செய்து கொண்ட ஒப்பந்தங்கள், பிற மதத்தவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கைகளுடைய உள்ளக்கம் வெளிப்படைத் தன்மைக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளல் அல்லது ஆள்வரி செலுத்தல் அல்லது போரிடுதல் ஆகிய இஸ்லாமிய அரசின் பிரச்சார வழிமுறை வெளிப்படைத் தன்மைக்கு சான்றாகும்.

**விசுவாசிகளே! நீங்கள் நீதி செலுத்தும் படியும் நன்மை செயயும் படியும் நிச்சியமாக அல்லாஹ் ஏவுகிறான்.** (அல்குர்ஆன் : 16:90)

ஒரு தடவை மிக மதிப்பும் மரியாதையும் உள்ள அரபுக் குழுக்களில் ஒன்றான பனூ மக்ஷூம் குழுவைச் சார்ந்த ஒரு பெண்மனி திருடிய குற்றத்திற்காக தண்டிக்கப்பட வேண்டியேற்பட்டது. எனினும் அவ்வாறு அப்பெண் தண்டிக்கப்பட்டால் அக்குழுவின் கண்ணியமும் மதிப்பும் மாசுபடுத்தப்படும் என்பதை உணர்ந்த அக்குழுவின் முக்கிய தலைவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் உரிய மிக நெருக்கமான நபித்தோழர் உஸாமா ரழி அல்லாஹு அன்ஹு அவர்களை அனுகி அப்பெண்ணுக்காக நாயகத்திடம் பரிந்து பேசுமாறு கேட்க்க அவரும் அதற்கினங்கி நாயகத்திடம் பரிந்து பேசிய போது

கோபமுற்ற நாயகம் "இறைவன் விதித்துள்ள தண்டனையில்(சட்டத்தில்) நீர் தலையிடுகின்றீரா?" என நபித்தோழரை கேட்டதோடு உங்களது முன்னைய சமூகங்கின் வீழ்ச்சிக்கான முக்கிய காணங்களில் ஒன்றாக அவர்களில் வசதியும் செல்வாக்கும் படைத்த குடும்பங்களைச் சார்ந்த ஒருவர் தருடினால் அவர் தண்டிக்கப்படாமல் விட்டமையும் வசதியற்ற ஏழைக் குடும்பங்களில் ஒருவர் திருடினால் அவர் தண்டிக்கப்பட்டமையுமாகும். அல்லாஹ்வின் ஆணையாக முஹம்மத் ஆகிய எனது மகள் பாதிமா திருடினாலும் நான் அவளது கையை துண்டித்து தண்டனை வழங்குவேன் என்றார்.

மேற்குறித்த அல்குர்ஆனிய வசனமும் சம்பவமும் நல்லாட்சி சொல்லும் பின்வரும் பண்புகளை மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது.

**சட்டவாட்சி**

சட்டம் அனைத்துக்கும் மேலாக இருக்கும் என்ற நல்லாட்சி பண்பு இங்கு துலங்கும் பாங்கு அலாதியானது. இறை சட்டம் அனைவருக்கும் சமமானதே. அது அரசின் தலைமைக்கும் ஆள்வோறுக்கும் ஆளப்படுவோறுக்கும் என்ற வேறுபாடுகாட்டாது.

சட்டத்தை மிகச் சரியாக நடைமுறைப்படுத்தாத போது அவரும் சட்டம் வழங்கும் தண்டனையை சுமக்க வேண்டும் என்ற அற்புதமான பாடத்தை சொல்கிறது.

**சமத்துவம்**

வசதியும், செல்வாக்கும், பிறரின் சிபாரிசும் செல்லுபடியாகாத சமத்துவம் பேணப்படும் அரசாகவே இஸ்லாமிய அரசு பரிணமிக்கிறது என்பதற்கு இது போதுமான சான்றாகும்.

**ஓர் அடியானுக்கு குடிமக்களின் பொறுப்பை அல்லாஹ் வழங்கியிருக்க அவன் அவர்களது நலன் காக்க தவறினால் சொர்க்கத்தின் வாடையை கூட நுகரமாட்டான்.** (ஸஹீஹ் அல் புஹாரி)

**நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள் ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்பு பற்றி வினவப்படுவீர்கள். நாட்டுத் தலைவன் அவரது பொறுப்பு பற்றி வினவப்படுவார்...**(புஹாரி முஸ்லிம்)

**முஸ்லிம் குடிமக்களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்கும் ஒருவர் அக்குடிகளுக்கு மோசடி செய்த நிலையில் இறந்து விட்டால் சொர்க்கத்தை அவருக்கு அல்லாஹ் தடை செய்துவிடுவான்.** (ஸஹீஹ் அல் புஹாரி)

**ஒரு ஒநாய் பசியால் இறந்தாலும் நான் பதில் சொல்ல வேண்டும்.** (உமர் ரழியல்லாஹு அன்ஹு)

மேலே குறிப்பிட்ட இஸ்லாமிய அரசின் முதல் தலைவர் நபிகளார் சொன்ன முதல் மூன்று செய்திகளும் இன்றைய நல்லாட்சி வேண்டி நிற்கும் பொறுப்புக் கூறல் என்ற பண்புக்கு சிறந்த ஆதாரமாகும். மேற்குறிப்பிட்ட இஸ்லாமிய அரசின் இரண்டாம் கலீபா உமர் (ரழியல்லாஹு அன்ஹு ) அவர்களது அற்புதமான வரிகள் பொறுப்புக் கூறல் என்கின்ற நல்லாட்சிப் பண்பை ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்பே குறிப்பிட்டிருப்பதை காட்டுகிறது.

இஸ்லாமிய ஆட்சியில் வாழ்ந்த முஸ்லிம் அல்லாதவர்கள் திம்மிக்கல்[1] என அழைக்கப்பட்டனர். இரண்டாம் கலீபா உமர் (ரழியல்லாஹு அன்ஹு) ஆட்சிக்காலத்தில் வயது முதிர்ந்த பலவீனமுற்ற தள்ளாடிய நிலையில் ஒரு யூதர் செல்வதனைப் பார்த்த கலீபா உங்களை **"நாம் நீதியாக நடத்த வில்லை போல் தோன்றுகிறது. உங்களது இளமை காலத்தில் நன்கு பயன்படுத்திவிட்டு முதியவராகி பலவீனமமைந்ததும் உங்களை நாங்கள் புறக்கணித்து விட்டோம்."** என்று கூறி அவரை அழைத்து வீடு சென்று உணவளித்து உபசரித்து இஸ்லாமிய அரசின் திறைசேரியில் இருந்து அவரது மரணம் வரை ஓய்வூதியம் பெறவும் ஏற்பாடு செய்தார் என்ற செய்தி சமத்துவத்திற்க்கான மிகச் சிறந்த உதாரணமாகும். சுமத்துவம் எனும் போது அனைவரும் ஒரே மாதிரியானவர்கள் என்ற அர்த்தம் பெறப்பட மாட்டாது. மாறாக பல்வேறுவகையானவர்களுக்கு மத்தியில் சமத்துவமாக நடப்பதே இஸ்லாமிய பெறுமானமாகும்.

ஆகவே நல்லாட்சி எண்ணக்கருவின் பண்புகள் இஸ்லாமிய அரசின் கோட்பாட்டுக்குள் ஒன்றித்து பயணிப்பதை அவதானிக்க முடிகின்றது.

**பெறுபேறு**

இஸ்லாமிய அரசியல் சிந்தனையையும், அது தூய வடிவில் நடைமுறைப்படுத்தப்பட்ட வரலாற்றினையும் ஆய்வு செய்யும் ஒருவர், நல்லாட்சிக்குறிய எட்டு பிரதான பண்புகளையும் முஸ்லிம்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கூறுவதை விட அந்த பண்புகளின் ஊற்றுக்கண்ணாக இஸ்லாமிய அரசிய சிந்தனை இருப்பதைக் கண்டு கொள்வார் என்பதே இந்த ஆய்வின் பிரதான கண்டறிதலாகும்.

நவீன உலகம் அறிமுகப்படுத்தியிருக்கின்ற நல்லாட்சி எண்ணக் கருவானது இன்னும் கோட்பாட்டு மையத்திலே சுழன்று கொண்டிருக்கின்ற அதேவேளை இஸ்லாமிய அரசியல் கோட்பாடு நடைமுறை தளத்திலே பயணித்து ஓர் நல்லாட்சிக்கான ஆரோக்கியமான செயற்பாட்டு அடித்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளமை இவ்வாய்வின் பிரிதொரு கண்டறிதலாகும்.

**முடிவுரை**

நல்லாட்சி என்ற எண்ணக்கரு. இஸ்லாமிய அரசியல் கோட்பாடு என்ற இந்த ஆய்வு காலத்தோடு ஒன்றித்துச்செல்லும் தலைப்பு என்ற வகையில் ஆய்வுக்குற்படுத்தப்பட்டது. ஆய்வின் வெளிப்படையான போக்கு இஸ்லாமிய அரசியல் கோட்பாடு என்ற பரந்த பகுதியில் நல்லாட்சி எண்ணக்கரு எல்லா இடங்களிலும் உடன்படுகிற நிலையை பார்க்க முடிகின்றது. ஆகவே நல்லாட்சி எண்ணக்கரு இஸ்லாமிய அடிப்படைகளோடு முறண்படாது உள்ளமை ஆய்வாளர்களது பார்வையாகும்.

**முன்மொழிவுகள்**

- ஒரு முஸ்லிம் தனக்கான தனித்துவமான ஓர் அரசியல் கோட்பாடும், அதனை நடைமுறைப் படுத்துவதற்கான அடிப்படைகளும் இருப்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்
- மதசார்பின்மை சிந்தனையால் இஸ்லாத்தை சமூக, அரசியல், பொருளாதார தளத்திலிருந்து விடுவித்து சில ஆன்மீகப் பணிகளோடு சுறுங்க வைத்துள்ள உண்மை நிலையை தெரிந்து கொள்ள வேண்டும்.
- உலக வராலாற்றில் மனித சமூகத்தின் விமோசனத்திற்காகவும் நன்மைக்காகவும் முன்வைக்கப்படும் கோட்பாடுகளில் நல்ல பக்கங்களும் தீய பக்கங்களும் உள்ளன.
- அவற்றை இஸ்லாமிய அடிப்படைகளோடு ஒப்பிட்டு நிறைகளை எடுத்துக் கொள்வதற்கு தடையேதும் இல்லை என்பதற்கு ஹில்புல் புலூல் என்ற ஒப்பந்தம் சான்றாகும். மக்கா மற்றும் வெளியூர் வாசிகளுக் அநீதி இழைக்கப்பட்டால் அவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை முழுமையாக போராட வேண்டும் என்ற அந்த ஒப்பந்தம் குறித்து இஸ்லாமிய அரசின் தலைமை சொன்ன வார்த்தையானது "எனக்கு செந்நிற ஒட்டகைகள் கிடைப்பதை விட அந்த சிறப்பு மிகு ஒப்பந்த்தில் கலந்து கொண்டமையானது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. இப்போதும் (இஸ்லமிய அரசில்) அது போன்ற ஒப்பந்தங்களுக்கு அழைக்கப்பட்டால் பதிலளிப்பேன்"

எனவே நாமும் இஸ்லாமிய அடிப்படைகளில் நின்று அனைத்தையும் அணுகும் ஒரு பார்வை வர வேண்டிய தேவை உள்ளது.

**உசாத்துணைகள்**


- ✓ அல்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பு". (2016). பறகஹதெனிய: ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா.
- ✓ அஸ்வர், ஏ.எம், ரம்ஸியா,எம்.ஆர்.எப். (2016). "இலங்கையில் நல்லாட்சியை கட்டியெழுப்புதல்: ஓர் விமர்சனப் பகுப்பாய்வு". South Eastern University of Sri Lanka: Arts Research Session.
- ✓ சன்கீதீ, முக்தார். (2017). "இஸ்லாமிய அரசியல் சிந்தனையும் தேசிய அரசு முறைமையும் ஓர் ஒப்பீட்டு நோக்கு". Retrieved from: https://todayleaks.wordpress.com/2017/12/20/.
- ✓ பவுஸ், ஸகி. (2015). "இஸ்லாமிய அரசியல் சிந்தனையும் தேசிய அரசு முறைமையும் ஓர் ஒப்பீட்டு நோக்கு". Retrieved from: https://maatram.org.

- ✓ ابن هشام.(1990). "السيرة النبوية". بطنطا: دار الصحابة للتراث.
- ✓ أبو جيب، سعدي. (1985). " دراسة في منهاج الإسلام السياسي". بيروت: مؤسسة الرسالة.
- ✓ أبو يعلى ، محمد بن الحسين الفراء. (2000)." الأحكام السلطانية". لبنان: دار الكتب العلمية – بيروت.
- ✓ البياتي، منير حميد.(2010). " النظام السياسي الإسلامي مقارنا بالدولة القانونية". الأردن: دار النفئس – عمان.
- ✓ الدميجي، عبد الله بن عمر.(1982). " الإمامة العظمى عند أهل السنة والجماعة". الرياض: دار الطيبة للنشر والتوزيع.
- ✓ عارف، نصر محمد .(1994)."في مصادر التراث السياسي الإسلامي - دراسة في إشكالية التعميم قبل الاستقراء والتأصيل. الأردن: المعهد العالمي للفكر الإسلامي.
- ✓ العجلان، فهد بن صالح.(2009)." الانتخابات في الفقه الإسلامي". إشبيليا: دار كنوز.
- ✓ عزت الخيّاط ، عبدالعزيز.(1999). "النظام السياسي في الإسلام: النظرية السياسية ونظام الحكم". القاهرة: دار السلام.
- ✓ عطية عدلان.(2008)." الأحكام الشرعية للنوازل السياسية". القاهرة: دار اليسر.
- ✓ القرضاوي، يوسف.(1998). " السياسة الشرعية في ضوء نصوص الشريعة ومقاصدها". مكتبة وهبة.
- ✓ المباركفوري، صفي الرحمن.(2001). "الرحيق المختوم". الرياض: أولي النهى للإنتاج الإعلامي.
- ✓ محمد ،غربي.(2011). " الديمقراطية والحكم الراشد". دفاتر السياسية والقانون.


Retrieved from: https://dspace.univ-ouargla.dz/jspui/bitstream/123456789/7426/1/DSP0122.pdf